# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ ஆவணி 1986 ★ இதழ் 128


# ஆறுமுகநாவலர் பாரம்பரியம் பரவிய வகை



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களைப்பற்றி நன்ருக நாற்புறங்களிலிருந்தும் கருத்தூன்றி மீளாய்வு செய்து அறியவேண்டும். சைவம் காத்தார், பிற மதவாணர்களைக் கண்டித்தார், தமிழ் வசனநடை பழக்கிஞர், பாடசாலைகளை ஆரம்பித்தார், அடிப்படை நூல்கள் எழுதிஞர், உரை எழுதிஞர், சீர்திருத்தம் பேசிஞர் என்றெல்லாம் ஆராய்ந்தமை அமையும். **ஆறுமுகநாவலர் அடிச்சுவட்டில்** என்னும் மகுடமிட்டு அல்லது ஆறுமுகநாவலர் வரலாறும் காலமும் என்று மகுடமிட்டு ஆயிரம் பக்கங்களில் இரண்டு பாகமாக அகலமான ஆழமான நூல் வெளிவருதல் எந்நாளோ, அந்நாள் நன்நாள். அது செய்வார் யாவரோ, அவரே சான்ருேன்.



பலாலி ஆசிரியர் பயிற்சியாளரைத் தொழிலதிபர் தம் வள்ளுவர் மண்டபத்தில் வரவேற்றுபசரித்துத் தம் பணிகளை விளக்குதல்.

நாவலரைப் போல நமக்கு ஆளில்லை என்று நூறு ஆண்டுகளுக்கு முன் யாரோ சொன்னது சொன்னபடியே ஒலிக்கிறது. ஆளெவரும் முன் வரவில்லை. நாட்டில் பல்கலைக்கழகங்கள் பல வந்துள்ளன. பட்டதாரிகள் பல்லாயிரவராகியுள்ளார்கள். பேராசிரியர்கள் தொகை அதிகரித்து வருகிறது. நாவலரைப்பற்றி நான்கு பேராசிரியர்கள் கூடி, நல்

(தொடர்ச்சி 2 ஆம் பக்கம்)

★ விவசாய விரிவாக்கம் அவசியம் வேண்டியது ★

உ
சிவமயம்






## சுந்தரமூர்த்தி நாயனுர் தேவாரம்

திருவாரூர் – பண் இந்தளம்

இறைகளோ டிசைந்த இன்பம்
இன்பத்தோ டிசைந்த வாழ்வு
பறைகிழித் தனைய போர்வை
பற்றியான் நோக்கி னேற்குத்
திறைகொணர்ந் தீண்டித் தேவர்
செம்பொனும் மணியுந் தூவி
அறைகழல் இறைஞ்சும் ஆரூர்
அப்பனே அஞ்சினேனே.

திருச்சிற்றம்பலம்

தேவர்கள் செம்பொன்னும் மணியும் திறையாகக் கொண்டு வந்து, தேவரீரின் ஒலிக்கும் கழலணிந்த திருவடிகளை, மலர்தூவி வணங்குகின்ற திருவாரூரில் எழுந்தருளியுள்ள தந்தையே, தோலால் போர்க்கப்பட்ட பறையைக் கிழித்தாற்போன்ற (ஒன்பது துவாரங்களையுடைய) உடம்பைப் பற்றி நின்று பார்த்தவனுகிய அடியேனுக்கு, அவ்விடத்தில் சிறு பொருள்களோடு பொருந்தி வந்த இன்பத்தையும், அவ்வின்பத்தோடு பொருந்தி நிகழ்ந்த இல்வாழ்க்கையையும் அஞ்சுதலுடையனுயினேன்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

### ஆறுமுகநாவலர்...

லாய்வு செய்தல் காலத்தின் தேவையாகிறது. அன்று நாவலர் ஒருவர். இன்று பலர். அன்று ஆறுமுகநாவலர் செந்திநாதையருக்குச் சொன்னதை தமிழ்நாட்டு நல்ல சுவாமிப்பிள்ளை கேட்டு, தமிழில் ஆழமில்லாத ஆனந்தக்குமாரசுவாமிக்குச் சொல்ல, ஆனந்தக்குமாரசுவாமி அகிலம் முழுதுமறிய ஆங்கிலத்தில் சொன்னவை, அல்டஸ் கக்சிலி போன்ற பெரும் பேராசிரியர்களில் சனுதன தர்மம் முதலான தத்துவ நூல்களில் வெளிவந்துள்ளன. சிதம்பரம் உலகத்தின் இருதயம். இருதயத் துடிப்பு உடம்பெங்கும் இரத்தம் பாய்ச்சும் வகையில், சிதம்பர நடனம் உலக இயக்கத்துக்கு மூலாதாரம். இருதயம் நின்ருல் உடம்பு எங்கே? சிதம்பரத்தில் நடராச மூர்த்தம் ஆடலை நிறுத்தினுல் உலகம் எங்கே? சிவநடனம் தந்த கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி வாழ்க.




## ஊக்கம் உடைமை

(வேலை செய்யும்போது மனத்தளர்வின்றி ஆர்வம் கொள்ளுதல்)

''உள்ளம் உடைமை உடைமை பொருள் உடைமை
நில்லாது நீங்கிவிடும்.''

ஒருவனுக்கு நிலைநின்ற பெருஞ்செல்வம் ஊக்கம், உடைமையாகும். பொருள் உடைமை நிலைபெருது ஒரு காலத்தில் நீங்கிவிடும்.

**Diligence**

(Spirited Activity)

Possession is the possession of mental energy, other possessions disappear and do not last.

## வரிக்குமேல் வரி

இலங்கைக் கரைநாடுகளை ஒல்லாந்தர் கைப்பற்றி ஆண்ட காலத்தில் இரக்கமின்றிப் பலவிதமான வரிகளை விதித்து நிதிதிரட்டினுர்கள்.

### கனிதரு மரங்களுக்கு வரி

தமிழர் வாழ்ந்த இடங்களில் மா, பலா முதலிய மரங்களும் வளர்ந்து பயன் கொடுத்தன. அவற்ருல் நல்லவருமானம் கிடைத்ததைக் கண்ட ஒல்லாந்த அதிகாரிகள், மரங்களைக் கணக்கிட்டு வரிவிதித்து வந்தார்கள். கனிதரு மரங்களுள் பனைமரமும் கணக்கிடப் பெற்றது.

### தலைவரி

வயது சென்றவர்களும் சிறுவர்களும் நீங்கலாக, ஆண்கள் அனைவரும் ஒல்லாந்த அரசாங்கத்துக்கு வரி கொடுக்கவேண்டியவர்களாயிருந்தனர். அந்த வரிக்குத் தலைவரி என்று பெயர். அது தலைவிதியாய் அமைந்தது. தலைவரி கொடுக்கவேண்டியவர்களின் பெயர்கள் எழுதப்பட்ட இடாப்புக்கு ஆள்தோம்பு என்று பெயர்

அங்கவீனர்கள், புலன்வசதியற்றோர் வரிவிலக்குப் பெற்றிருந்தார்கள். தலைவரி இடாப்பு என்னும் ஆள்தோம்பு மூன்ருண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட்டுவந்தது.

★ இலுப்பைத் தோப்புகள் எமக்கு அவசியம் ★

# சென்ற மாதங்களின் பழுதிலாச் சிறப்புப் பணிகள்

வெளி மாவட்டங்களுக்குப் போக்குவரத்து வசதியீனங் காரணமாக, மில்க்வைற் பணிகள் அயல் ஊர்களிலேயே அதிகமாக இடம்பெற்றுள்ளன. சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்ற ஆண்டுவிழாவைச் சிறப்பித்த தொழிலதிபர் பலவித மரக்கன்றுகள் உபகரித்து ஆசிவழங்கினார்.

கொக்குவில் இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தின் பரிசளிப்பு விழாவைக் கௌரவித்துப் பரிசுகள் உபகரித்தார்.

பண்டத்தரிப்பு தேவாலயம் சார்ந்த மக்கள் கூட்டத்தில் உரையாற்றி மரம்நாட்டும் பணியை வற்புறுத்தி மரக்கன்றுகள் உபகரித்து, வருங்காலச் சந்ததியினரின் வாழ்வு சிறத்தல்வேண்டும், அதற்கு நாம் இன்றே பணி புரிதல்வேண்டும் என்றார். விவசாயியை மதித்து மணப் பந்தலில் முதலிடம் கொடுக்கவேண்டும் எனச் சூசமாகக் குறிப்பிட்டு, விவசாயிகளே நல்ல குடும்பத் தலைவர்களாவர் என்றார்,

மானிப்பாய் உதயசூரியன் நூல்நிலையத் திறப்பு விழாவிற் பங்குபற்றித் தினமும் ஒருமணி நேரமாவது படித்தல் வாசித்தல் அவசியம் என்று வற்புறுத்திப் பேசினார்.

யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெற்ற மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசையில் பங்குபற்றிப் பரிசுகள் வழங்கிச் சிறப்பித்தார்.

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளின் பண்ணிசைப்போட்டியிற் பரிசுபெற்றவர்களுக்கான தரமான பரிசுப் புத்தகங்களை வழங்கிப் பாராட்டி ஊக்கப்படுத்தினார்.

கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயத்தில் நடைபெற்றநீர்த்தொட்டித் திறப்புவிழாவில் பங்குபற்றிக் கல்வியதிகாரிகளான பிரம்மஸ்ரீ சர்மா, திரு. பொ. சிவஞானசுந்தரம் முதலானோர் சமூகத்தில், தொண்டின் மகத்துவத்தைப்பற்றியும், மாணாக்கர்களை மனிதர்களாக உருவாக்கும் பணிபற்றியும் பேசி, முன்னோர் செய்துவைத்த தர்மப் பணிகளை நினைவூட்டி, நாமும் பணிசெய்தல் வேண்டும் என்று ஊக்குவித்தார்.

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில் மானிப்பாய் மறுமலர்ச்சி மன்றத்தார் நடத்திய விவசாயக் கருத்தரங்கிற் பங்குபற்றித் தரிசு நிலங்கள் எல்லாம் விவசாயப் பண்ணைகளாக மாறவேண்டும், நாம் சுயநிறைவு பெறுதல்வேண்டும், போதியளவு பழவர்க்கங்களை உண்டாக்குதல் வேண்டும், உடனடியாக நல்லதொரு விவசாயப்பாடசாலை அவசியம் தேவை என்றெல்லாம் பேசினார்.

சாந்தை சித்திவிநாயகர் சனசமூக நிலையமும் கிராம அபிவிருத்திச் சங்கமும் செயற்படுவதற்கான புதிய கட்டிடத் திறப்புவிழாவிற் பங்குபற்றி மரம்நாட்டு விழாவுக்கான உபகரிப்புக்களை வழங்கி, பிரதம விருந்தினர் உரையாற்றினார். ஆசைகளையும் தேவைகளையும் குறைத்து, வசதி குறைந்தவர்களுக்கு ஓரளவாயினும் உபகரித்தல் வேண்டும் என்றும், ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு கைத்தொழிலைப் பழகிக்கொள்ளுதல் வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் கில்னர் மண்டபத்தில் செவிப்புலனற்றோர் நடத்திய கைப்பணிப் பொருட்காட்சியையும் மலிவு விற்பனையையும் தொழிலதிபர், அண்ணா உரிமையாளர் அன்பர் நடராசா அவர்களுடன் சேர்ந்து திறந்துவைத்துப் பாராட்டிப்பேசி ஆதரவு நல்கினார்.



## கடவுள் வழிபாடு

கடவுள் ஒருவர் இருக்கிறார்
கடவுள் எங்கும் இருக்கிறார்
கடவுள் எல்லாம் அறிவார்
கடவுள் எல்லாம் வல்லவர்
கடவுள் இரக்கம் உடையவர்
கடவுள் நம்மைக் காக்கிறார்
கடவுளை ஒருகாலும் மறவாதே
கடவுளை எந்நாளும் வணங்கு

காசியிலுள்ள இந்து பல்கலைக்கழகத்தில் மாளவியா தலைமையில், பழநி ஈசானசிவாசாரியார் மேலே சொன்ன வாக்கியங்களை விளக்கிப் பேசியபோது எல்லோரும் வியந்தார்கள். ஈசானசிவாசாரியார் குப்பிழான் செந்திநாதையரின் மாணாக்கர். செந்திநாத ஐயர் ஆறுமுக நாவலரின் மாணாக்கர்.

''தம்பி, நீ நன்றாகப் படித்து, நல்லொழுக்கமும் ஈசுர பக்தியும் உடையவனாய் நடக்கவேண்டும்.'' — நாவலர்

## Divine Life for Children

◘

**Swami Sivanandar**



## You will see GOD

Think of God
Speak of God
Chart the name of God
Sing a song of God
Love God
Worship God
Pray to God
Weep for God
Cry for God
Then you will see God

## மொழிகள் அறிந்த கால்ட்வெல்

றொபேட் கால்ட்வெல் அயர்லாந்துப் பிரதேசத்திலே 1814 ஆம் ஆண்டில் தோன்றி, ஸ்கொத்துலாந்திலும் மேற்படிப்புப் படித்தவர். ஓவியமும் நன்கறிந்த அவர், கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் சேர் டானியல் சென் போர்ட் என்னும் பேராசிரியரிடம் லத்தின், கிறிக், ஜேமன் மொழிகளைக் கற்றுர். பேராசிரியரின் மேற்பார்வையில் மொழியொற்றுமை பற்றி ஆராய்ந்துவந்தார்.

கிறிஸ்தவசமயம் பரப்புவதற்காகச் சென்னைக்கு வந்த அவர் தாம் வந்த கப்பற்பிரயாண காலத்திலே பிறெனண் என்பவரிடம் வடமொழி, தெலுங்கு கற்றுக்கொண்டார். சென்னையில் தங்கிய காலத்தில் போப், அண்டர்சன் முதலானவர்களின் தொடர்பும் அவருக்குக் கிடைத்தது. அவர் துருவர் என்பார் வீட்டில் தங்கியிருந்தபோது தமிழை நன்ருகக் கற்றுவந்தார். அதன் பின் மலையாள மும் பயின்று கிறிஸ்தவ குருவாய்ப் பணிபுரிந்தார். அவர் பாண்டிநாட்டுக்குப் பணிபுரிவதற்காகச் சென்று ஊர்களை நன்கறிந்து கொண்டார். தமிழ் நாகரிகத்தை நன்கறிந் திருந்த எலிசா என்பாரை மணந்து தமிழாய்வு செய்து வந்தார். தென்னிந்திய மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் தலைசிறந்த ஆராய்ச்சி நூலை எழுதியபின், தாமரைத்தடாகம், ஞானஸ்நானம், திருநெல்வேலி வரலாறு, நற்கருணை முதலிய நூல்களை எழுதியபின், 1891 ஆம் ஆண்டில் மறைந்தார். அவரின் அடக்கம் இடையன்குடி என்னும் இடத்தில் உள்ளது.

## றொட்ஸ்க்கி

லெவ் டேவிடோவிச் றொட்ஸ்க்கி என்னும் ரஷ்ய நாட் டுப்பெரியார் 1879ஆம் ஆண்டில் தோன்றி 1940 வரை வாழ்ந்து படாதபாடுகள் பட்டு நாட்டுக்கு விடிவுகண்டு, கொள்கை முரண்பாடு காரணமாக நாடுகடத்தப்பட்டு, அஞ்ஞாத வாசகாலத்திலேயே சதிகாரரால் கொலையுண் டவர். இருபத்திரண்டு வயது இளைஞனயிருந்த போது, ரஷ்ய மாமன்னன் அவரைச் சைபீரியாவுக்கு நாடு கடத் தினர். அவர் 1905 ஆம் ஆண்டுப்புரட்சியில் பெரும் பங்குபற்றினர். அதனல் மீண்டும் நாடுகடத்தப்பட்டார். அவர் பிரான்ஸ் நாட்டில் தஞ்சம் புகுந்து 1917ஒக்ரோபர் புரட்சிவரை உழைத்து, நாட்டுக்கு மீண்டு லெனின் அர சில் சிறப்பிடம் வகித்து, ஸ்ராலின் ஆட்சியில் பதவி யிழந்து நாடுகடத்தப்பட்டார். அவரின் பெருந்தியாகமுந் தொண்டும் காரணமாக அவரின் நண்பர்கள் அவர் வழியொழுகி, நாலாம் சம்மேளனங் கண்டனர். நாலாம் சம்மேளனத்தில் கிளைகள் உலகெங்கும் தாபிக்கப் பெற்ற வகையில் கொழும்பிலும் தோழர்கள் குரல் கொடுத்தார் கள். இவ்வாருக ஸ்ராலின் கட்சியார் மெக்சிக்கோவில் மறைந்திருந்ததை அறிந்து, சதிசெய்து 20-8-1940 இர வில் அவரைத் தாக்கியதால் அவர் மறைந்தார். அவர் லட்சியமும் புகழும் வாழும்.

*No Washing is complete without*
✲ *MILK WHITE BLUE SOAP* ✲

## மைக்கல் பரடே

லண்டன் நகரையடுத்த ஊரொன்றில்பிறந்த மைக்கல் பரடே இளமைக்காலம் தொடக்கம் இரசாயனம், பௌ திகம் ஆகிய இருதுறைகளிலும் நாட்டமுள்ளவராய்ப் படித்து வந்தார். சேர். ஹம்பிரிடேவி என்னும் விஞ்ஞா னியிடம் பணிபுரிந்து படித்துவந்த திறமையால் இவர் முன்னேறி வந்தார். விரைவில் இரசாயன விரிவுரையா ளராகி பேராசிரியர் பதவியையும் அலங்கரித்தார். இரசாயனத்துறையில் பல புதியன கண்ட புகழ் இவருக் குண்டு. குளோறின் திரவமயமாதல், இன்னும் மின்சாரத் துறையில் காந்தவியல் என்பன இவர் கண்டவைகளாம். இவர் காலம் 1791—1867 ஆகும்.

## இந்திய சுதந்திரம்

சுதந்திரம் என்ருல் இந்திய சுதந்திரம் என்பது தான் வரலாறு படைத்தது. நூற்றுண்டுக்காலம் ஞானியர், மேதைகள், அறிவாளிகள், நிபுணர்கள், தொழிலாளர்கள் வாழ்வை வெறுத்துப் பாடியும் எழுதியும் பேசியும் வந்த வரலாற்றில் என்று தணியும் இந்த சுதந்திரதாகம் என்ற குரலோசையும், சிறைவாழ்க்கையும், பட்ட துயரமும் பெற்ற பெருமையும், பங்குபற்றிய பெரியவர்கள் பெயர் வரிசையும் நினைக்கும் போது ஆனந்தக்கண்ணீர் வடியாம லிருக்கமாட்டாது. ஆங்கிலேயர் மிலேச்சராயிருந் தாலும் அவுணராயோ அரக்கராயோ இருக்கவில்லை.

## அலெக்சாண்டர் கிறஹம்பெல்


இங்கிலாந்தில் எடின்பேர்க்நகரில் 1847ஆம் ஆண்டில் தோன்றியவர். புதியது கண்டுபிடித்த புகழுக்குரியவர், அமெரிக்காவுக்குச் சென்று பொஸ்ரன் நகரில் அங்காதி பாதத்துறையில் பேராசிரியராயிருந்து, தொலைபேசி என்னும் ரெலிபோன், மற்றும் போட்டோ போன் முதலி யவற்றையும் கண்டவர், பொனகிருவ் என்பதில் திருத் தங்கள் செய்தவர், 1922ஆம் ஆண்டு வரை புகழ்பெற வாழ்ந்தவர்.

## காடினல் யோன் ஹென்றி நியூமன்

மெத்தப்படித்த ஆங்கிலேய மதகுரு, பிரசித்தங்கள், பிரசுரங்கள் எழுதுவதில் கைதேர்ந்த எழுத்தாளர். பல்கலைக்கழகமறியவும், தேவாலயமறியவும் புகழ்பெற்று வாழ்ந்த அவர், இங்கிலாந்துக்குரிய தேவாலயத்தை விடுத்து உரோமன் கத்தோலிக்கம் புகுந்தவர். பெரிய போதகராக நாற்பதாண்டுகள் பணிபுரிந்த அவர், பத்தொன்பதாம் நூற்றுண்டில் 1801 வரை வாழ்ந்தவர். அவர் எழுதிய பாடல்கள், நூல்கள் இன்றும் பெருமதிப் புக்குரியனவாயுள்ளன.

## சுபாஸ் சந்திரபோஸ்

இந்திய சுதந்திரப் பாதையில் தீவிர நடை நடந்து வெள்ளைக்காரரைக் கலக்கிய மாபெரும் வீரர், சுதந்திரப் போரில் இழக்காசியாவில் தளமும் படைவீரரும்கொண்டு முன்னேறியவர்.



## திரு. வி. க.

தமிழ்த்தென்றல் என வழங்கும் திருவாரூர் விருத்தாசல முதலியார் கலியாணசுந்தர முதலியார் தமிழ் நாட்டில் ஆறுமுகநாவலர் பாரம்பரியத்தைப் பேணிக் காத்தவர். நாவலர் வழி தியாகராசபிள்ளை, நா. கதிரை வேற்பிள்ளை, கலியாணசுந்தர முதலியார் எனவந்த மாணுக்கர் பரம்பரையினர். நல்ல வசனநடை, உறுதியான பேச்சு, தர்க்கரீதியான உரையாடல், பாரம்பரியமான உரைநயம், சமுதாய ஒருமைப்பாடு, சமயங்களுள் சமரசம், பெண்களின் மேம்பாடு முதலிய பலதுறைகளிலும் தரமான நூல்கள் எழுதியதோடு, நவசக்தி முதலான சிந்தனைப் பத்திரிகைகளையும் நன்ருக நடத்திப் பெருவிருந்து செய்த பெரியார்.

## பிலிப் த மெல்லோ

ஒல்லாந்தர் இலங்கைக்கரை நாடுகளை ஆண்ட போது கொழும்பில் 1723ஆம் ஆண்டில் தோன்றிய தமிழன் பிலிப் த மெல்லோ. ஈபுறு, கிறீக், லத்தீன், ஒல்லாந்தம், போத்துக்கேயம் முதலிய பல மொழிகளை நன்கறிந்த வீரத்தமிழன் இவர். பைபிள் என்னும் மதநூலை மூலத்திலேயே படித்த தமிழன் இவர். இவர் பைபிளை முதன் முதலாகத் தமிழிலே மொழிபெயர்த்ததோடு, வடமாகாணத்தில் மதபோதகராயும் பணிபுரிந்தவர்.

மண்டலபுருடர் செய்த சூடாமணி நிகண்டில் இருபது பாடல்கள் இவர் செய்தவை. இவை இவர் பெயரால் உவமைப்பாடல்கள் எனத்தனியாகவும்அச்சிடப்பெற்றுள்ளன. இவற்றைவிடப் பன்னிரண்டாந்தொகுதியிலும் வேறு நூறுபாடல்கள் இவர் செய்தவை. இவரிடம் ஆறுமுகநாவலர் அவர்களின் தந்தையார் கந்தர் எனும் ஆராய்ச்சி கந்தப்பிள்ளை ஒல்லாந்த மொழியை நன்கு கற்ருர். போதகர் 1790 ஆம் ஆண்டுவரை தொண்டு செய்தார்.

### இரட்டைக் கலாநிதி

## கலாயோகி ஆனந்தர்

இலங்கைச் சட்டசபையில் 1834ஆம் ஆண்டளவில் தமிழ் பேசும் பெருங்குடியினரின் தனிப்பிரதிநிதியாக நியமனம் பெற்ற ஆறுமுகத்தாபிள்ளை குமாரசுவாமி முதலியாருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் இருந்தனர். மகளின் மைந்தர்களே குமாரசாமி, இராமநாதன், அருணுசலம். மகன் முத்துக்குமாரசுவாமியின் மைந்தனே ஆனந்தக்குமாரசுவாமி.

முத்துக்குமாரசுவாமி தந்தையாரைப் போலச் சட்டசபைப் பிரதிநிதியானவர். இங்கிலாந்தை நன்கறிந்தவர். ஆறுமுகநாவலரின் பாராட்டைப் பெற்றவர். அவரின் பண்பாட்டை அறிந்த ஆங்கிலப் பெண்ணெருத்தி பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவள் எலிசபெத் கிளேபிபி என்பது அவள் பெயர். விக்ரோறியா மகாராணியிடம் நேர்முகமாகப் பிரபுப்பட்டம் பெற்ற சேர். முத்துக்குமாரசுவாமி அவர்களின் தலைப்பாகை, சந்தனப்பொட்டு, கோட், உத்தரியம், பதக்கம், பஞ்சகச்சு உடை இவற்றை எல்லாம் கண்ட கிளேபிபி இந்தக்கலாச்சாரம் தழைக்கத் தன்வயிற்றில் தான் ஒரு மைந்தனை உருவாக்க விரும்பி, கிளாட்ஸ்ரோன், டிசறலி முதலாய பிரதம மந்திரிமார் மூலம் திருமணம் பேசுவித்தவள். கைமேற்பயன் 1877 ஆம் ஆண்டில் ஆனந்த கெளரிஷ்குமாரசுசாமி புகழுடன் தோன்றினுர்.

மைந்தன் பிறந்து இரண்டாண்டுக்குப் பின் தந்தை சேர். முத்துக்குமாரசுவாமி 1879இல் மறைந்தார். அந்த ஆண்டில் அவருடைய இடத்தில் சட்டசபையை அலங்கரிக்கப்போன மருகன் இராமநாதன் 1930ஆம் ஆண்டு வரை சட்டசபையில் பிரதிநிதியாயிருந்தார். ஆனந்தர் தாயோடு இங்கிலாந்துக்கு மீண்டு அங்கே கல்விகற்று அருங்கலைவாணராயினுர். நிலச்சரிதவியல் அவருடைய துறை. அவர் அதனேடு கலைத்துறை யாவுங் கற்று, அரச உத்தியோகத்தை விடுத்துக் கலைத்தொண்டு செயதார். ஐநூறுக்கும் அதிகமான ஆராய்ச்சிக் கட்டுரைகள் தீட்டிய அவர் எழுதிய கலைநூல்கள் மிகப்பல. மத்திய காலச்சிங்களக்கலைக்கு மதிப்புக் கொடுத்து அவர்களைத் தட்டியெழுப்பி உங்களுக்கும் பழைய கலைகள் தெரியும் என்று சொல்லிக் கொடுத்தார். இவரின் கலைஞானத்தை நேரிலறிந்த அமெரிக்கர் இவரை 1917இல் தங்கள் நாட்டுக்கழைத்து பொஸ்ரன் நூதனசாலையில் அமர்த்தினுர்கள். அவர் அங்கே முப்பது ஆண்டுச் சேவை செய்து கலை விளக்கம்செய்தார். அவரைப்பற்றி உலகம் நன்கறிந்தது அவர் உலகக்கலைஞர், உலகுக்குரியவர்.

## தாகூர்

இரவீந்திரநாத் தாகூர் வங்காளம் தந்த மாபெரும் கவிஞர். வடமொழி, வங்காளம், ஆங்கிலம் வல்ல பெரும்புலவரின் கவிதைகள், உரைக்கோவைகள், நாடகங்கள் உலகப் புகழ்பெற்றவை. நோபல் பரிசும் பெற்றவை. கீதாஞ்சலி இறைவனை நாயகனுகக்கொண்டு ஆன்ம நிவேதனஞ்செய்யும் வகையிலமைந்தது. ஏனைய படைப்புகளும் தனிப்பெருமை வாய்ந்தவை.

★ விறகுப் பஞ்சத்தை சவுக்குமரம் போக்கும் ★

# வழக்கிலுள்ள அருஞ்சொற்கள் சில

1. ஒருவருடைய சரித்திரத்தை அறிவிப்பது
2. காண்டம் என்னும் பகுதியில் அடங்கும் சிறுபிரிவு
3. அரசமாளிகையில் உண்டாட்டுக் களிபாட்டிடம்
4. இளவேனிற் பருவத்தின் அதிதெய்வம்
5. பழைய காலத்து ஆயுதங்களின் பொதுப்பெயர்
6. பெண்களுள் சிறந்தவளுக்கு வழங்கிய பெயர்
7. சிறந்த சஞ்சீவியெனும் மருந்து மரம்
8. கற்புள்ள மகளிர்க்கு அழகைக் கொடுக்கும் நிறம்
9. கற்புள்ள மகளிர்க்கு அழகைக்கெடுப்பது
10. உலகத்தில் இல்லாதவை உவமையாகக் கூறுதல்
11. மகளிர் அணிந்த அழகுமிக்க காதணிகளில் ஒன்று
12. பரந்த முறையில் விரிவாகக் கூறுதல்
13. இலை காய் முதலியன கொண்டு சமைத்த உணவு
14. மணமகனுக்கு பெண் கொடுப்பவர் விதிக்கும் நிபந்தனை
15. ஆராய்ந்து அறிந்து நிச்சயித்தல்

1. அயநம் 2. படலம் 3. பானபூமி 4. வசந்தன்
5. வாள் 6. நங்கை 7. ஒஷதி 8. சுணங்கு
9. பசப்பு 10. அபூதஉவமை 11. சுவதண்டிரம்
12. பன்னுதல் 13. அடகு 14. கன்னியாசுல்கம்
15. ஓர்தல்

## என். எஸ். கிருஷ்ணன்

சிரிக்கவைத்துச் சிந்திக்கப் பழக்கிய சிறந்த நடிகர் கிருஷ்ணன் என்றால் மிகையாகாது. மதுரம், புளிமூட்டை முதலான சகபாடிகளுடன் மேடையேறினால் சிரிக்காதவரும் சிரித்து மகிழ்வர். சிரித்துச் சிரித்து ரசிக்கும்போது சிலசமயம் கண்ணீரும் சொட்டு விழும். அது பலவித நோய்களைக் குணப்படுத்தியும் உள்ளது. எவ்வித முன்னேற்பாடுகளோ, முற்பழக்க விசேடங்களோ எவையுமில்லாமல் மேடையேறியதும் கிருஷ்ணனுக்கு நகைச்சுவை தன்வலிய வந்து பாயும். அவரை எச்சரிக்கை செய்யவோ கட்டுப்படுத்தவோ எந்த ஒரு இயக்குநரும் முற்படுவதில்லை. ஆங்கிலேயர் சார்லி சப்லின் என்றதும் சிரிப்பார்கள். தமிழன் கிருஷ்ணன் என்றதும் சிரிக்காமல் என்ன செய்வான்?


## LEARN YOUR ENGLISH

I. Give one word for each of the following as an adjective.

1. A surgeon famous for his skill.
2. A person who has no feelings for others.
3. A person who acts before thinking.
4. One who works to the satisfaction of the employer.
5. One who is always complaining.
6. One who spends his time learning.

**Answers:**

1. eminent 2. inconsiderate
3. precipitate 4. efficient
5. querulous 6. stu dius



## பகவான் இராமகிருஷ்ணர்

பரமஹம்சர் என உலகமெல்லாம் போற்ற, இராமகிருஷ்ண மடங்கள் அமையக் காரணமாயிருந்தவர். அருமைச்சீடர் விவேகானந்தரின் ஞானமெல்லாம் உலகம் முழுவதும் பரவும் வகையில் ஊற்றாக இருந்தவர். உரையாடல் மூலமும், உபதேசம் மூலமும், குட்டிக்கதைகள் மூலமும் உயர்ந்த கருத்துக்களைச் சொன்னவர். மிகப் பெரிய ஞானியான அவருக்கு எழுதப் படிக்கத்தெரியாது என்ப. எல்லாவற்றையும் தேவி உபாசனையால் கேட்டும் உணர்ந்தும் சொன்னவர் அவர்.

### பன்மொழிப்புலவர்
### வணக்கத்துக்குரிய
## சுவாமி ஞானப்பிரகாசர்

மானிப்பாயைச் சேர்ந்த சுவாமிநாதபிள்ளை தங்கமுத்து தம்பதிகளின் மைந்தராய வைத்திலிங்கம் 1887ஆம் ஆண்டில் தோன்றியவர். பெற்றோர் இவருடைய இளமைக் காலத்தில் இறந்தமையால் உறவினராய தம்பிமுத்து என்பாருடன் அச்சுவேலியில் வாழ்ந்து கல்விகற்றுப் புகையிரதப் பகுதியில் உத்தியோகம் ஏற்று றெயில்வே கிளாக்கர் என வழங்கிவந்தார். மேலும் படித்தல்வேண்டும் என விருப்பங்கொண்டு; மொழித்தொண்டு செய்வதற்கு வாய்ப்பான முறையில் போத்துக்கீயம், ஒல்லாந்தம், கிரேக்கம், லத்தீன், யேமன், சீனம், முதலிய மொழிகளைக் கற்றார். கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்து ஞானப்பிரகாசர் என்னும் பெயர்பெற்று மதவளர்ச்சிக்காகப் பணிபுரிந்தபோது, மொழித்தொண்டு புரிந்துவந்தார். அவற்றோடு நூல்கள் எழுதுவதில் முயன்று, ஒப்பியல் அகராதி தமிழின் வரலாறு, யாழ்ப்பாணச் சரித்திரம், தருக்கம், துறவிஞானம், ஆண்டவர் சரித்திரம் முதலிய நூல்களை எழுதினார். இவரைப் பாராட்டிய அறிஞர் இவருக்குச் சொற்கலைப் புலவர் என்னும் பட்டஞ் சூட்டிக் கௌரவித்தனர்.

கோடைகாலத்தில் குளங்களை ஆழமாக்குவோம்



# சுந்தரமூர்த்தி நாயனார்

ஆரூரர், ஆளுடையநம்பி, நம்பியாரூரர், திருநாவலூரர், வன்றொண்டர், தம்பிரான் தோழர், சேரமான் தோழர், சிங்கடியப்பன், வனப்பகையப்பன், திருத்தொண்டத்தொகையாளி என்றெல்லாம் திருநாமங்கள் பெற்ற சுந்தரமூர்த்திநாயனார் தேவாரத்திருமுறைகள் அருளிய மூவருள் மூன்றாமவர்.

இவர் சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பெற்றுப் பாடுமாறு பணித்தருளப் பெற்றவர். இவர் பாடியருளிய பதிகங்கள் 38000 என்ப. இவற்றுள் 100 பதிகங்களே இக்காலத்தவருக்குக் கிடைத்துள்ளன. இவற்றுள் 1026 பாடல்கள் வந்துள்ளன.

இவர் மறையவர் குலத்துத் தோன்றியவராகலின் மறையவர்க்குரிய வைதிகத்திருவுடையவர். அன்றி, அரசன் ஒருவரால் வளர்க்கப்பெற்றவராகலின் மன்னவர்க்குரிய திருவும் உடையவர். இவற்றால் இவர் பெருமதிப்புக்குரியவராயுமிருந்தார்.

இவர் சிவபெருமானிடம் அன்பு மேலிட்டுத் திருவருள் ஞானம் கைவரப்பெற்றுத் தரிசித்த முறையினாலேயே ஐந்து புலன்களும் ஒடுங்கி நின்றன. கரணங்கள் நிருவிகற்பமாய் நின்றன. நிருவிகற்பமாவது மனசும் இந்திரியங்களும் கூடியுணர்தல். இவரின் குணங்கள் மூன்றும் திருந்து சாத்துவிகமாய் நின்றன. எனவே இவர் பேரின்ப வெள்ளத்தில் மூழ்கியிருந்தார்.

இவர் தமக்கு முற்பட்டவர்களான அறுபது நாயன்மார்களையும், ஒன்பது தொகையடியார்களையும் உலகத்தவருக்கு முதலில் அறிவித்தார். இவரே திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்தின் கதாநாயகன். இவர் சிவபெருமானிடம் கொண்டிருந்த பக்திமேம்பாட்டினால் அவரிடம் பொன்னும், நெல்லும், போகமும் கேட்டுப் பெற்று அநுபவித்தபின் பெரும் பதவியையடைந்தவர்.

இவரின் சமகாலத்து அரசரான சேரன் இவரை வணங்கி இவரைத்தம் சிம்மாசனத்தில் இருத்தி அழகு பார்த்து, பொன்னால் அபிடேகம் செய்து, வேண்டியளவு திரவியங்கள் கொடுத்தவர்.

இவர் பல அற்புதங்களைச் செய்து சிவவழிபாட்டின் பயனை நிரூபித்துக்காட்டியருளியவர். எங்கள் நாட்டின் பழைய திருத்தலமாய திருக்கேதீஸ்வரத்தின் மீது தேவராத்திருப்பதிகம் பாடியருளியவர். இவர் திருவாரூரைப் பெரிதும் அபிமானித்து எட்டுத் திருப்பதிகங்கள் பாடியருளியவர். இறைவனோடு தோழமை நெறியில் தகைச் சுவை நையாண்டி ததும்பக் குழைந்துருகி அழுதழுதும் பாடியருளியவர். இவருடைய பாடல்களுக்கு திருப்பாட்டு என்றும் பெயர் வழங்கியது. இவர் மற்றுப் பற்று எவையும் இன்றிச் சிவபெருமானை மனமுருகி வழிபட்டவர். விருத்தாசலம் என்னும் திருமுதுகுன்றத்து இறைவனைப் பாடும் போதும் ஊ நம் கிழடு இறைவனும் கிழடு என நையாண்டிபண்ணிபதும் இறைவன் வாலிபனாகவும் இறைவி குமரியாகவும் காட்சி கொடுத்துப் பன்னீராயிரம் பொன்னும் கொடுத்தனர். திருப்புகலூர் பாடுமின் புலவீர்காள் என்று மற்றவர்களையும் பாடி வணங்கச் சொல்லி இவர் பாடியதால் இவர் தொட்ட செங்கற்கள் யாவும் பொன்கட்டிகளாயின.



# அரவிந்த மகரிஷி

வங்காளம் ஒருகாலத்தில் இந்துகலாசாரம் என்னும் சைவாசாரம், சால்பு நிறைந்த நாடாய் நிலவியது. இராசேந்திர சோழன் பதினோராம் நூற்றாண்டில் அங்கெல்லாம் தமிழரைக் குடியேற்றியதோடு, வங்காளத்து மேதைகளையும் தமிழ்நாட்டுக்கு அழைத்துவந்தவன். சுப்பிரமணிய பாரதியாரும் வங்காளத்தை வாழ்த்தி வணங்கியவர். வங்கம் தந்த பெரியவர்கள் பலர். அவர்களுள் அரவிந்தர் ஒருவர். அரிவரிப் படிப்பையே இங்கிலாந்தில் பெரிய குடும்பத்தில் சேர்ந்து படித்தவர். பென்னம்பெரிய பரீட்சைகளைப் பதம்பார்த்து உயர்நீதிமன்றத் தலைவராயிருந்தவர். தீர்ப்புச்சொல்லுவதில் இறைவன் திருவுளம் எப்படியாகுமோ எனச் சிந்தித்து, அந்த வேலையை விடுத்து, இந்திய சுதந்திரதாகம் கொண்டு, புதுச்சேரி புகுந்து, ஆன்மீக வழிகண்டு, ஆச்சிரமம் அமைத்தவர். அந்த ஆச்சிரமம் நாளும் வளர்ந்து பல துறைகளிலும் மேம்பட்டு ஐரோப்பியர், அமெரிக்கர்களை அங்கே புகலிடம் காணச்செய்தது. வடமொழியிலுள்ள மிகக்கடினமான கிரந்தங்களை இறுக்கமான ஆங்கிலத்தில் வெளியிட்டு உலகத்தவரை இந்திய தத்துவ ஞானவாவியில் தாகந்தீர்க்க வழிகாட்டியவர்.

★ பம்பாய் வெங்காயம் இங்கேயும் விளையும் ★

2116



## ஆபிரகாம் பண்டிதர்


தமிழறிந்த, இசையறிந்த, ஓவியமறிந்த பெரும் புலவர், இயற்கை மருத்துவ நிபுணர் ஏபிரகாம் என்பார் தமிழ்நாட்டில் திருநெல்வேலியில் முத்துசுவாமி என்பாரின் மைந்தனாய் 1859இல் தோன்றி, 1874இல் தமிழாசிரியர்க்கான பயிற்சியில் சேர்ந்து பயின்றார். அக்காலத்தில் பலதுறைகளையும் விருப்பத்தோடு கற்றுவந்தார். வானியல், சோதிடம் முதயவினவும் கற்று இசைத்துறையில் புல்லாங்குழல் வாசிப்பதிலும் நிபுணரானார். அக்காலத்தில் புகைப்படம் பிடித்தல் நல்லபொழுது போக்காக இருந்தமையால் வெள்ளைக்காரரையண்டி அதிலும் நிபுணரானார். எந்த இயந்திரத்தையும் கருவியையும் விரைவில் திருத்தியமைக்கவும் பழகிக் கொண்டார். ஆசிரியர்க்கான பயிற்சி நிறைவேறியதும் 1876இல் ஆசிரியராகப் பணிபுரியத்தொடங்கிய காலத்தில், சுருளிமலையில் கருணானந்தர் என்னும் துறவியாரிடம் அறவுரைகேட்டு மூலிகைகளைப் பற்றி நன்கறிந்து கொண்டார். பின்னர் திண்டுக்கல் ஊரில் வாழ்ந்தவாறே கருணானந்தர் சஞ்சீவி மருந்துகள் தயாரித்து நோய்கள் பலவற்றைக் குணப்படுத்தி வந்தார். தமது ஓய்வு நேரங்களில் இசைத்துறையில் ஈடுபட்டு ஆராய்ச்சி செய்து வந்த காலத்தில் பயிற்றப் பெற்ற ஆசிரியையான பொன்னம்மாள் என்பாரை 1882இல் திருமணஞ்செய்து, சில ஆண்டுகளின்பின், தம் ஆசிரியர் வேலையை விட்டுத் தஞ்சைமாநகர் சென்று வைத்தியஞ் செய்து வருங்காலத்தில் சைவப்பெரியார்கள் பலரின் தொடர்பு கிடைத்தது.

இவருடைய தரமான மருந்துவகைகள் உள்நாட்டிலேயன்றிப் பிறநாடுகள் எங்கும் பெரும்பெயர் பெற்று நல்ல வருவாயை ஈட்டிக்கொடுத்தன. சொந்தமாகப் பெரிய வீடமைத்துப் பலருக்கும் உதவிபுரிந்து வந்த பண்பாளராயினார்.

தமிழிசைத்துறையின் மறுமலர்ச்சிக்காக நன்றாக உழைத்து முன்னோடி என மதிக்குமளவில், கருணாமிர்தசாகரத்திரட்டு என்னும் நூலை 1907-ஆம் ஆண்டிலும் கருணாமிர்தசாகரம் என்னும் விரிவான நூல் 1917-ஆம் ஆண்டிலும் வெளியிட்டுப் பெரும் புகழ் பெற்றதோடு, இசைத்துறைக்குத் தமிழ்நாடே தாயகம் என்பதையும் பலவழிகளால் நிரூபித்துக்காட்டினார். இவர் தமது அறுபதாம் வயதில் 31. 8. 1919 ஆம் நாள் மறைந்தமை மனித குலத்துக்கு பெருமிழப்பாகும்.

## தி. த. கனகசுந்தரம்பிள்ளை

திருக்கோணமலையைச் சேர்ந்த கனகசுந்தரம்பிள்ளை தெல்லிப்பழையோடு சம்பந்தம் பெற்றுப் பெரும்பெயர் பெற்ற சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் அவர்களோடு நட்புரிமை பெற்று, நல்லவழிகளில் நற்றமிழ்த் தொண்டு செய்தவர். சென்னைப் பட்டதாரியாகி, அங்கே பரீட்சகராகிப் பல தொண்டுகள் செய்தவர். அவர் பெற்ற மைந்தர் நால்வரும், அவரின் தம்பியாரும் நல்ல தமிழ்த் தொண்டர்கள்.



## தனிநாயகம் அடிகளார்

தமிழ்வளர்த்த பெரியவர்கள் வரிசையில் எங்கள் பிரதேசத்தைச் சேர்ந்த அடிகளார் உலகத் தமிழனாகி முப்பத்தேழுக்கும் அதிகமான நாடுகளில் ஐம்பத்தைந்துக்கும் அதிகமான பல்கலைக்கழகங்களில் தமிழ்பரவும் வகை செய்ததோடு, உலகத்தமிழாராய்ச்சி மகாநாடுகளை உலகின் பல பாகங்களிலும் கூடும் வகைசெய்தவர். தமிழர் கலாசாரம் என்னும் பெயரிலமைந்த முத்திங்கள் வெளியீட்டை ஆங்கிலத்தில் வெளியிட்டு உலகத்தை அணைத்தவர். இலங்கை, மலேசியா பல்கலைக்கழகங்களில் பேராசிரியராயும் பணிபுரிந்தவர். மில்க்வைற் தொழிலதிபரைத் தமிழாராய்ச்சியாளருக்கு உதவும்வகை செய்தவர்.

## அவிழ்த்துப் பாருங்கள்

1. தண்ணீரில் ஓடிவரும் தத்துவப்பசு
தரை மீது நடவாது தத்துவப்பசு

2. தொந்தி வயிறன் சந்தையிலே
குந்தி யிருக்கிறான் சொகுசாக

3. தோகை மயிலாள் சொகுசுக்காரி
தோட்டி கையிலே தொல்லைப்படுகிறாள்

4. நாலுகாலுண்டு நன்றாக
வீச வாலில்லைப் பூச்சி கலைக்க

5. நீட்டி விட்டால் நீளக் கிடப்பாள்
சுருட்டி விட்டால் மூலையிற் கிடப்பாள்

6. பட்டணத்து மொட்டை மரம்
வெட்ட வெட்டத் தழைக்கிறது

7. பட்டணம் கிட்ட இருந்தும்
எட்டிப் பார்க்க முடியவில்லை

8. முதுகிலே மூட்டை தூக்கி
மூன்று மணிக்கு ஒருமுழம் போவாள்

1. கப்பல் 2. பூசனிக்காய் 3. துடைப்பம் 4. நாற்காலி 5. பாய் 6. தலை 7. முதுகு 8. நத்தை

★ பயறு, உளுந்து பயிரிட்டால் வயல் வளம்பெறும் ★

## நாம் இழந்துவரும் உயிரினங்கள்

முன்னர் எம்மவர் கணித்த 84,00,000 யோனி பேதங்களுள் விஞ்ஞானவுலகில் எஞ்சிநின்ற 2000 பேதங் களுள்ள உயிர்வர்க்கங்களுள் ஆண்டுதோறும் ஒருவர்க்கம் அழிந்து வருகின்றதாக அழுகிறுர்கள்.

யானைக்குப் புகழ்பெற்ற எங்கள் நாட்டில் யானை இறக்குமதியாகப்போவதாகக் கேள்வி. இப்படியாளுல் கறையான், கடியெறும்பு, மயிர்கொட்டிப் புழு என்பன என்று அழிந்தொழியும் என நாம் எதிர்பார்க்கிறோம்.

பழைய பறவைகள், வண்ணத்துப் பூச்சிகள் முதலி யனவற்றை இன்று காணோம். இந்திரகோபம் என்ற தம்பளப்பூச்சி, ஏழு சகோதரிகள் என்ற புலுணி என்பன அருகி வருகின்றன.

### நல்ல உரை நடை

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் தமிழில் நல்ல முறையில் உரைநடை எழுதினர் என்பர். தமிழ் மக்களுக்கு வசனநடை கற்பித்த வல்லாளன் நாவலர். முன்னர் எட்டாம் நூற்றுண்டில் இறையஞர் களவிய லுக்கு உரையெழுதிய ஒருவர் முதலில் உரைநடை எழுதினர் என்ப. பின்னர் வடமொழிப் பதங்கள் நிறையக் கலந்த மணிப்பிரவாள நடை ஒன்று கையா ளப்பட்டு வந்தது. அதைப் பின்வந்தவர்கள், கொஞ்சம் கொஞ்சமாகக் கைவிட்டனர்.

### கோயிலுக்கா

போதும் சாந்தும் புகையும் கொண்டு போங்கள். வாழ்த்துங்கள், வணங்குங்கள், போற்றுங்கள், பரவுதல் செய்மின்கள், பொருளியல்பு கூறுங்கள். வீண்பேச்சுப் பேசாதீர், பராக்குப் பாராதீர், வழியை மறைக்காதீர். எல்லோரும் இறைவனின் பிள்ளைகள்.

### சமயம்

உலகத்தின் பொதுச் சொத்து. சாசுவதமானது. சனுதனமானது.

### முனிவர்

ஞானமும், பக்தியும், தவமும், வாய்மையும் நிரம் பிய மகான்கள்.

### குரு வழிபாடு

குருவழிபாடு மெய்யுணர்வுநெறி. "குருவழியே சென்று கூடலுமாமே." என்பர் திருமூலர் குருபரிசித்த குவலயமெல்லாம் திரிமலம் தீர்ந்து சிவனவனுமே. குரு வின் திருமேனி தரிசனம், குருநாம உச்சாரணம், குரு வாக்கிய சிரவணம், குருரூப தியானம்.

### ஊழிக்காலம்

ஊழிக்காலம் நாலகு என்று தமிழ்ச் சங்க நூலாய பரிபாடல் கூறுகிறது. அவை கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்பனவாம். ஊழி என்பது உலகம் அழிந்து பொடியாகும் காலத்தையும், பின் மலர்ந்து உருவாகும் காலத்தையும் குறிப்பது.

### யாவர் - எவர்

| | | | |
|---|---|---|---|
| 1. | வேதம்வல்லவர் | — | வித்தகர் |
| 2. | விரதம்வல்லவர் | — | முனிவர் |
| 3. | அறிவுமிக்கவர் | — | சான்றோர் |
| 4. | புலமைமிக்கவர் | — | புலவாணர் |
| 5. | நாகரீகம் மிக்கவர் | — | நகரவாசி |

### ஆகமத்தின் நான்கு பாகங்கள்

1. சரியை
2. கிரியை
3. யோகம்
4. ஞானம்

### நாதரூபத்தில் தோன்றியவை

1. சதாசிவம்
2. ஈசானம்
3. தற்புருஷம்
4. அகோரம்
5. வாமதேவம்



## விவேகானந்த வெள்ளம்

### தொழில் ஒழுங்கு

எங்கள் தொழிலதிபர்கள் பலர் தொழில் முறையில் அசட்டை உள்ளவர்கள். உறவினர் என்ற போர்வை யில் மூளையில்லாதவரை அதிகாரிகளாக நியமிப்பர். மூளையில்லாதவர் கணக்கு வைக்கமாட்டார். ஒன்றுக்கு ஒதுக்கிய நிதியை மற்றொன்றுக்கு எடுத்தலாகாது. கணக்கு வைத்தல் திட்டமாயும் கண்டிப்பாயும் இருத் தல் வேண்டும். ஆற்றிலே போட்டாலும் அளந்து போட வேண்டும். தொழில்முறையில் கண்டிப்பு வேண்டும்.

உறவினரைக் கண்டிக்க முடியாத தொழிலதிபரை ஊரவர் மதிக்கமாட்டார்கள். தொழில் வளத்தில் சங் கோசம், சிநேகம், உறவுமுறை இடம்பெறலாகா. எவ ராயினும் கண்டிப்பு வேண்டும். கண்காணிப்பு வேண் டும். ஊக்கம் வேண்டும் இறைபணி என்ற எண்ணம் வேண்டும்.

### இதய உணர்ச்சி

வெறும் அறிவினுல் எவ்வித பிரயோசனமும் இல்லை. இதயத்தினின்றும் உணர்ச்சி எழுதல் வேண்டும். அறிவு சிறிதளவு தூரம் செல்லும். இதயவுணர்ச்சி இறைவ னருள் வரையும் செல்லும். அபிவிருத்திக்காரர், சீர் திருத்தக்காரர், தேசத்தொண்டர்கள் இதய உணர்ச்சி கொள்ளுதல் அவசியம். இதயத்தைத் தூய்மையாக்குதல் இன்றியமையாதது. தேசபக்திக்கு முதற்படி இதயசுத்தம்.

★ முருங்கை நடுவதால் மிகுந்த நன்மை கிடைக்கும் ★

## 1986 ஆகஸ்ட் மாத நிகழ்ச்சிகள்
**(ஆடி 16 — ஆவணி 15)**

| | | | |
|---|---|---|---|
| 1 | வெள்ளி | ... | ஏகாதசி விரதம் |
| 2 | சனி | ... | தனிநாயக அடிகள் தோற்றம்<br>அலெக்சாண்டர் கிரகம்பெல் நினைவு |
| 3 | ஞாயிறு | ... | பிரதோஷ விரதம் |
| 4 | திங்கள் | ... | மாவிட்டபுரம் தேர் |
| 5 | செவ்வாய் | ... | ஆடி அமாவாசை<br>மாவிட்டபுரம் தீர்த்தம்<br>அரவிந்தர் ஜெயந்தி |
| 6 | புதன் | ... | ஆயிலியம் |
| 7 | வியாழன் | ... | தாகூர் நினைவு |
| 8 | வெள்ளி | ... | ஆடிப்பூரம் |
| 10 | ஞாயிறு | ... | நல்லூர்க்கந்தன் கொடி |
| 12 | செவ்வாய் | ... | சுந்தரமூர்த்திநாயனர் குருபூசை<br>சுவாதி |
| 13 | புதன் | ... | அட்டமி பகல் 4-43 மேல் |
| 14 | வியாழன் | ... | நவமி பகல் 2-20 வரை |
| 15 | வெள்ளி | ... | வரலட்சுமி விரதம்<br>இந்திய சுதந்திரம் |
| 16 | சனி | ... | இராமகிருஷ்ணர் தினம் |
| 17 | ஞாயிறு | ... | பிரதோஷ விரதம்<br>தமிழ் ஆவணி |
| 18 | திங்கள் | ... | நடேசர் அபிடேகம்<br>சுபாஸ் சந்திரபோஸ் தோற்றம் |
| 19 | செவ்வாய் | ... | பூரணை விரதம், திருவோணம் |
| 22 | வெள்ளி | ... | கலாயோகி தோற்றம் |
| 23 | சனி | ... | சங்கடஹரகணபதி விரதம் |
| 24 | ஞாயிறு | ... | தமிழறிஞர் கனகசுந்தரம்பிள்ளை தோற்றம் |
| 25 | திங்கள் | ... | மல்லாகம் பழம் பிள்ளையார் கொடியேற்றம்<br>மைக்கல் பரடே தினம் |
| 26 | செவ்வாய் | ... | கார்த்திகை விரதம்<br>தமிழ்த்தென்றல்<br>கல்யாணசுந்தரர் தோற்றம்<br>இரவு 2-44 மேல் அட்டமி |
| 27 | புதன் | ... | அட்டமி நவமி<br>கிருஷ்ணஜெயந்தி |
| 28 | வியாழன் | ... | நவமி<br>கால்ட்வெல்டு நினைவு |
| 29 | வெள்ளி | ... | நவமி காலை 6-31 வரை |
| 30 | சனி | ... | பிதா ஞானப்பிரகாசர் தினம் |
| 31 | ஞாயிறு | ... | ஏகாதசி விரதம்<br>ஏபிரகாம் பண்டிதர் நினைவு |

'உனக்கு மூத்தவர்களை பெயர்சொல்லி அழையாதே'
'பெரியோர்கள் எதிரே சிரியாதே' — நாவலர்



## சலபாசனம்

நம்மவருள் சிலர் இடுப்புவலி, தொந்தி விழுதல், இருதய பலவீனம், சமிபாட்டுத்தாமதம், முதுகு வளையாமை, நீரிழிவு முதலிய குறைபாடுகளால் மனவருத்தமடைகிறோம். இவைபோன்ற குறைபாடுகள் இயற்கையாகவே நீங்கிப்போவதற்கு சலபாசனம் மிகுந்த நன்மை தருகிறது.

குப்புறப்படுத்து கைவிரல்களைப் பொத்தி கைகளைத் தொடைக்கு அருகில் மேல்நோக்கி வைக்கவும். விரும்பினால் கைகளை வயிற்றின்கீழ் கவிழ்த்து விறைப்பாக ஊன்றி வைக்கலாம். இடுப்பின் கீழ்ப்பகுதிகளை மெல்ல மெல்ல மேலே உயர்த்திச் சிலநிமிடங்கள் தரித்து, மெதுவாகப் பழைய நிலைக்குக் கொண்டுவருக. இதை மூன்று நான்கு முறை செய்துகொள்க. கால்களை மேலே உயர்த்தும் போது சாவதானமாக மூச்சை உள்ளே இழுத்து, அவற்றைத் தாழ்த்தும்போது, மூச்சை மெதுவாக வெளியே விடுக.

இது முன்சொன்ன குறைபாடுகளை நீக்குவதோடு கல்லீரல், கணையம், மண்ணீரல், சிறுநீர் உறுப்புக்கள் நன்மை பெறுகின்றன. கண்பார்வைக்கும் இது நன்மை தருகிறது.

## பென்னம் பெரிய கதிரை

யாழ்ப்பாணத்துத் திருநெல்வேலியில் நிலவிய சைவாசிரிய கலாசாலையில் விரிவுரையாளருக்கெனத் தனிப்பட்ட ஒரு பெரிய மேசையும் உயர்ந்த கதிரையும் இருந்தன. அந்தக் கதிரையில் ஆஜானுபாகுவாகிய மயிலிட்டி சுவாமிநாதன் அவர்கள் ஆரோகணித்து அமர்ந்திருந்தால் அழகாகவும் அருமையாகவும் இருக்கும். அவ்வாறே பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களும் அதனை அலங்கரித்தார்கள்.

அண்மையில் 1976 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் மசெச்சுசெற் மாநிலத்தில் செய்யப்பட்ட கதிரை ஒன்று இருபது அடி உயரமுள்ளதாம். அதில் ஆரோகணிப்பதற்குப் பக்கக் கால்களில் படிகள் போல மரச் சட்டங்கள் உண்டு என்பர். அதன் ஆசனப்பலகை ஒரு ஆளின் தலைமட்டமளவில் உள்ளதாம்.

## ஆகமம் வந்து பரந்தமை

இறைவனிடத்திலிருந்துவந்து, அன்னைபராசத்தியிடத்தும் பதிந்து, உலகினர்க்குப் பரந்தது. மேலிடத்திலிருந்து வந்ததாதலில் ஆகமம். அது மூதுரை, சிவாகமம் சைவர்க்குச் சிறப்புநூல், சைவர் ஆகமாந்திகள், சத்திநிபாதத்து உத்தமர்கள்.

★ எள் அதிகம் விளைந்தால் எல்லோருக்கும் நன்மை ★

பொது நூல் நிலையம்

NATIONAL GEOGRAPHIC SOCIETY
INCORPORATED A.D. 1888

The Officers & Board of Trustees
have enrolled

**K. KANAGARAJAH**

as a member of the

## National Geographic Society

In recognition of your support of this nonprofit scientific and educational organization chartered in 1888 for diffusing geographic knowledge and promoting research and exploration.

JANUARY 1, 1985

Gilbert M Grosvenor
President

Owen R. Anderson
Executive Vice President

Wilbur E Garrett
Editor

## மில்க்வைற் தொழிலதிபருக்கு மற்றொரு புகழ்

நூற்றாண்டு விழாக் காணப்போகும் பழம்பெரு மன்றமான சர்வதேசப் புவியியற் சங்கத்தில் திரு. க. கனகராசா அவர்கள் 1-1-1985 முதல் அங்கத்தவராகப் பதியப்பெற்றமைக்குரிய சான்றிதழ் கிடைத்துள்ளது.

மில்க்வைற் செய்தி பெற

### நினைவூட்டுகிறோம்

மில்க்வைற் மேலுறைகள் சேகரிக்க வசதியில்லாதவர்கள், பிற மாவட்ட வாசிகள் மில்க்வைற் செய்தி விரும்புவோர் வருடம் தோறும் இருபத்தைந்து ரூபா அனுப்புக. நிலைமை சீராகும்வரை இந்தச் சலுகை நிலவும்.

மில்க்வைற் தொழிலதிபர்,
தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம்.

## முருங்கை வளம்

கறி முருங்கை என்றும் உலாந்தா முருங்கை என்றும் வழங்கும் சாதாரண முருங்கை இருந்தாற்போல் பெரும் புகழ்பெற்றுள்ளது. இதன் மருத்துவக் குணமும் கறிச்சுவையும் மிகவருமை யானவை.

இன்று முருங்கை பெரும் பொருளாதாரப் பயிர்வகையில் இடம்பெறுகிற அளவில் முருங்கைக் காயின் விலை உயர்ந்துவிட்டது. சில இடங்களில் முருங்கையிலையும் சந்தைக்கு வருகிறது.

முருங்கைக்காய் தகரங்களில் அடைக்கப்பெறும் அளவில் சிலர் முயற்சி செய்வதற்கு யோசிக்கிறார்கள். நம்மவர் ஒருவர் தமது ஐம்பது பரப்புக் காணியில் முருங்கைத் தோப்பு அமைக்கப் போகிறார்.

முருங்கை நட இதுவே காலம். முருங்கையை முறித்து வளர்த்தல் வேண்டும். எனவே பெரிய அளவில் வளர்ந்த மரத்தை வெட்டிப் பல இடங்களில் நடுவதற்கு இது காலமாகும்.

முருங்கை நன்றாகப் பரவுவதற்கு தென்மராட்சிப் பகுதியினர் முயற்சி செய்ததுண்டு. அது போதாது. இன்னும் பரவுதல் அவசியம்.

மில்க்வைற் வாகனங்கள் தயாராகி உள்ளன. முருங்கைத் தடிகள் தருவதற்கு விருப்பமுள்ளவர்கள் அறிவியுங்கள். கந்தமடம் அம்மன் வீதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. சபா நடேசன் ஏராளமான தடிகள் தந்துள்ளார்கள்.

## மரவள்ளி, வாழை தொடரட்டும்

பயன்தருமளவில் மரவள்ளித் தடிகளையும், வாழைக் குட்டிகளையும் பிறருக்குக் கொடுத்து உதவ விரும்புவோர் தயவுசெய்து அறிவியுங்கள். எங்கள் பொருளாதாரம் வளரவேண்டும். வரண்ட பகுதி பசுமையாதல் வேண்டும்.

மில்க்வைற் விவசாயப் பகுதி

**Milk White products are successful choice everywhere.**

★ வேப்பமரம் வீடுகள்தோறும் நிற்கவேண்டியது ★

## பாடறிந்து ஒழுகிய பண்பாடு

பண்பாடு, கலாசாரம் என்றெல்லாம் பேசுகின்றார்கள். கிரேக்கர் பண்பாடு பழையது என்கிறார்கள். அந்தக் கிரேக்கரும் கிறீட், எகிப்து, பினிசியா, பாபிலோனியா, லிடியா முதலிய பல நாடுகளில் கடன்வாங்கிக் கட்டி எழுப்பிய நாகரிக முதிர்ச்சியைப் பெற்றார்கள். இங்ஙனமே பிரித்தானியரின் நவநாகரிகமும் எத்தனையோ மக்களின் நாகரிகக் கலப்பால் உருவானதாகும். அவர்கள் கிரேக்கரிடம் அறிவுத் திறத்தையும், யூதரிடம் கடவுளுண்மையையும் பாடறிந்தொழுகும் பண்பாட்டையும் உரோமரிடம் சட்டத்துக்குக் கீழ்ப்படியும் நலத்தையும், சாக்சனியரிடம் பரந்த மனப்பான்மையையும், பணிவையும், நோமானியரிடம் ஒழுக்கத்தையும் சிட்டாசாரத்தையும் பயின்றார்கள் என்பது வரலாறு.

இந்துப்பண்பாட்டை ஆராயும்போது அது பாரத நாட்டின் இரு கோடிகளிலும் வாழ்ந்த ஆரியர் திராவிடர் என்னும் மக்களின் கலப்பால் உருப்பெற்றது என்பது துலாம்பரமாகத் தெரிகிறது. எங்கள் பண்பாட்டின் முதற்படி பொதுநலத்துக்காகச் சுயநலத்தைத் துறத்தல் என்பதாகும். பிறர்பிள்ளை தலைதடவத் தன் பிள்ளை தானே வளரும் என்பது தமிழ்ப்பண்பாடு.

தற்கால இந்தியாவுக்குத் தாராளமாக உபகரித்த மாநிலங்களில் வங்காளமும் ஒன்று. இந்தியாவின் பன்முக மறுமலர்ச்சிக்கு வங்காளம் உபகரித்த துறைகள் பல. கலை, இலக்கியம், அரசியல், சமூக சீர்திருத்தம், சமயம், தத்துவம் என்னுந் துறைகள் தலையாயவையாயுள்ளன.

இவ்வாறாக, பண்பாடு என்றால் என்ன என்று பண்டைக் காலத்தில் சங்க இலக்கியங்களில் வகுத்தெழுதிய தமிழன் பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல் என வரையறுத்துள்ளான். "உரோமாபுரிக்குச் சென்றால் உரோமனாயிரு." என வழங்கும் ஆங்கிலப் பழமொழி பாடறிந்தொழுகல் என்றால் என்ன என்பதை நன்றாக விளக்குகிறது.

# Learn Your English

**Give one word to mean each of the following.**

1 An old man
2 A feeble old man
3 A man who lived before history
4 Custom of middle ages
5 Old fashioned songs
6 Words that are not used now

**Answers:**

1. aged 2. decrepit 3. prehistoric 4. Medieval 5. archaic 6. obsolete.

## காலம் பெறுமதியானது

வீணே கழியும் ஒரு நிமிடத்தையேனும் மீண்டு உபயோகிக்கமுடியாது. எனினும் இதையறிந்த பின்னும் எவ்வளவு நேரத்தை வீணாக்குகிறோம்.

— மகாத்மா காந்தி




நொடிப்பொழுதில் உங்கள் ஆடைகளின் அழுக்கை அகற்றி பளிச்சிடும் வெண்மையைப் பெறுவதற்குப் பாவியுங்கள்.

**சுப்ப மில்க்வைற் சோப்**

★ இது ஒரு மில்க்வைற் தயாரிப்பு ★

ஒரு கட்டி விலை ரூபா 4-50 மட்டுமே

**மேலுறைகளைச் சேகரித்துப் பின்வரும் பொருட்களை இனாமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்**

2 மேலுறைகளுக்கு 1 அழகிய ஸ்ரிக்கர்
5 மேலுறைகளுக்கு 1 அப்பியாசக் கொப்பி அல்லது 1 மில்க்வைற் செய்தி அல்லது 1 பொலித்தீன் பாக்
15 மேலுறைகளுக்கு 1 கைலேஞ்சி.

## அத்வைதம்

இன்று அத்வைதம், விசிஷ்டாத்துவைதம், துவைதம் என்றெல்லாம் இறைவன் ஆன்மா தொடர்பு பற்றிக் கோட்பாடுகள் நிலவுகின்றன. அத்வைதம், பற்றிச் சொன்ன சங்கராசாரியார் தென்னாட்டவராயிருப்பவும், அத்வைதம் பற்றித் தமிழில் எட்டாம், ஒன்பதாம், பத்தாம், பதினோராம், பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் நூல்கள் எழவில்லை. பதின்மூன்றாம் நூற்றாண்டுகளில் பட்டனார் பகவத் கீதையைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடினார்.

யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம். யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப் புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர் திரு. க. சி. குலரத்தினம் 1-8-86.